புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, புதிய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், 9 புதிய பேருந்து வழித்தட சேவைகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் நேற்று முன்தினம் (04.06.2025) துவக்கி வைத்தார்கள். உடன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் , புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, பொது மேலாளர் (த.அ.போ.க.) கே.முகமதுநாசர் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

புதுக்கோட்டையில் 9 புதிய பேருந்து வழித்தடச் சேவைகள்!

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி- – சிவ.வீ.மெய்யநாதன் – கே.கே.செல்லப்பாண்டியன் துவக்கி வைத்தனர்!

புதுக்கோட்டை, ஜூன் 6 -

புதுக்கோட்டை மாவட்டம்/ மாநகராட்சி, புதிய பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், 9 புதிய பேருந்து வழித்தட சேவைகளை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் 04.06.2025 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

பின்னர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் பொதுமக்களின் பொருளாதாரத்தினை மேம்படுத்திடும் வகையில் எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழகத்தின் முன்னோடித் திட்டமான, நகரப் பேருந்துகளில் மகளிர், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள், ஆகியோர்க ளுக்கான இலவச பேருந்து பயணத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, புதுக்கோட்டையில் இருந்து உப்பிலிக்குடிக்கும், புதுக்கோட்டையில் இருந்து சடையம்பட்டிக்கும், புதுக்கோட்டை யில் இருந்து தேனிப்பட்டிக்கும், புதுக்கோட்டை யில் இருந்து தொண்டைமான் ஊரணிக்கும், திருச்சியிலிருந்து புதுக்கோட்டை வழியாக பெருமகளூருக்கும், தஞ்சாவூரிலிருந்து புதுக்கோட்டை வழியாக மதுரைக்கும், பொன்னமராவதியில் இருந்து மேலத்தா னியத்திற்கும், அறந்தாங்கியில் இருந்து பெருமருதூருக்கும், கீரனூரில் இருந்து விராலிமலைக்கும் என மொத்தம் 9 புதிய பேருந்து வழித்தட சேவைகள் துவக்கி வைக்கப்பட்டது.

இதன்மூலம் புதுக்கோட்டை யிலிருந்து மற்ற பகுதிகளுக்குச் செல்லும் பொதுமக்கள் அனைவரும் மிகுந்த பயன் பெறுவார்கள். எனவே, தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலன் கருதி செயல்படுத்தப்பட்டுவரும் இத்தகைய புதிய பேருந்து சேவைகளை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திடும் வகையில் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் பொதுமக்களின் அன்றாட போக்குவரத்திற்காக பேருந்து சேவைகள் நாள்தோறும் தொடர்ச்சியாக இயக்கப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் 9 புதிய பேருந்து வழித்தட சேவைகளை இன்றைய தினம் துவக்கி வைக்கப்பட்டது. இதன்மூலம் புதுக்கோட்டையில் இருந்து பல்வேறு இடங்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்கு இப்பேருந்து சேவைகள் மிகவும் உதவிகரமாக அமையும்.

எனவே, பொது மக்களின் போக்குவரத்து வசதியினை எளிமையாக்கிடும் வகையில் இந்த பேருந்து சேவைகள் உரிய நேரங்களில் இயக்கிடும் வகையில் பணிகளை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது எனவும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், , முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா,

மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, பொது மேலாளர் (த.அ.போ.க.) கே.முகமது நாசர், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், துணை மேலாளர்கள் பாலமுருகன் (நிர்வாகம்), ராஜேந்திரன் (தொழில்நுட்பம்), புதுக்கோட்டை கிளை மேலாளர் மணிவண்ணன், உதவிப் பொறியாளர் (இயக்கம்) தில்லைராஜ், புதுக்கோட்டை வட்டாட்சியர் மு.செந்தில் நாயகி, மண்டல துணை வட்டாட்சியர் ஆ.லட்சுமணன் மற்றும் எம்.எம்.பாலு, நைனாமுகமது, க.மதியழகன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை! வே.வாசு – கூ.பி.ஜெயின் பங்கேற்பு!

வில்லிவாக்கம் டி.வி.செம்மொழி எம்.சி. - கிரிஜா இல்ல மணவிழா வரவேற்பு!

பா.மு.முபாரக் - தயாநிதிமாறன் எம்.பி. - மேயர் பிரியா - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ. வாழ்த்து!

சென்னை, ஜூன் 6 -

வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிக் கழக தலைமைப் பொதுக்குழு உறுப்பினரும் 104 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான டி.வி. செம்மொழி - கிரிஜா ஆகியோரின் புதல்வி செ. தயாளு - அ.சாகர் மேத்தா ஆகியோரின் மணவிழா இன்று (6.6.2025 - வெள்ளிக்கிழமை) காலை 7.30 மணிக்கு சென்னை, அண்ணா நகர் மேற்கு 13 வது பிரதான சாலையில் அமைந்துள்ள தேவி திருமணியம்மன் ஆலயத்தில் நடைபெறுகின்றது.

அதனைத் தொடர்ந்து மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி சென்னை, அமைந்தகரை புல்லா அவென்யூவில் அமைந்துள்ள எல்.கே.என்.திருமண மண்டபத்தில் இன்று (6.6.2025 வெள்ளிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு நடைபெறுகின்றது.

மணவிழா வரவேற்பிற்கு சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமை யேற்று மணமக்கள் செ.தயாளு - அ.சாகர் மேத்தா ஆகியோரை வாழ்த்துகிறார்.

மேலும் இம் மணவிழா வரவேற்பில், நீலகிரி மாவட்டக் கழக முன்னாள் செயலாளர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பா.மு.முபாரக், தயாநிதி மாறன் எம்.பி., மேயர் பிரியா ராஜன், அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., வில்லிவாக்கம் கிழக்குப் பகுதிச் செயலாளர் வே.வாசு, மேற்கு பகுதிச் செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின்,

வட்டச் செயலாளர்கள் சொ.முருகேசன், ப.லோகு பாபு, கே.எஸ்.பாபு, பா.இளையா, ப.மலர்க்கொடி, உள்பட மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னணித் தோழர்கள் கலந்து கொண்டு மண மக்களை வாழ்த்துகின்றனர்.

மணவிழாவிற்கு வருகை தருவோரை 104 வது வார்டு மாமன்ற உறுப்பினர் - கழக தலைமை பொதுக்குழு உறுப்பினர் டி.வி.செம்மொழி, திருமதி கிரிஜா செம்மொழி, செ.அஞ்சுக மொழி செம்மொழி ஆகியோர் வரவேற்கின்றனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம் கெங்கவல்லி ஒன்றியம் கூடமலை ஊராட்சியில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர் . பின்னர் அன்னதானம் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் கு.சின்னதுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றியக் கழகச் செயலாளர் ஆர். சித்தார்த்தன், ஒன்றிய துணைச் செயலாளர் ஜெ.மணிமாறன், மாவட்ட பிரதிநிதி பொன்.தங்கராசு , கோவிந்தராஜ், ராஜேந்திரன், ராஜா, கதிரவன், கார்த்திக் ,கருப்பண்ணன், மஞ்சுநாதன், வெள்ளையன், சங்கர், தேவேந்திரன், கணேசன், சங்கர், பெரியசாமி, மாரிமுத்து, முருகேசன், பிரகாஷ், பாலமுருகன், சிவா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியம், நந்தியன்குடிகாடு கிராமத்தில் நந்தியன்குடிகாடு முதல் நைனார்குடிகாடு வரை சாலை மேம்படுத்தும் பணியை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.

‘நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்’ விரைவில் தொடக்கம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, ஜூன் 6 -

முதலமைச்சர் அவர்கள் மிக விரைவில் “நலம் காக்கும் ஸ்டாலின்” எனும் திட்டத்தை தொடங்கி வைக்கிறார் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள டிஎம்எஸ் வளாகத்தில், 2025-26 ஆம் ஆண்டு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக்கோரிக்கை அறிவிப்பு, நீடித்த நுரையீரல் அடைப்பு நோய் மற்றும் கொழுப்புமிகு கல்லீரல் நோய் விழிப்புணர்வு பயிற்சி முகாமினை தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் பேசியதாவது:-

இந்தியாவில் 3வது பொதுவான இறப்பிற்கு காரணமாக விளங்குகின்ற ஒரு பெரிய நோய், நீடித்த நுரையீரல் அடைப்பு நோய் என்பதாகும். COPD என்று சொல்லக்கூடிய Chronic obstructive pulmonary disease எனும் நோயினால் உயிரிழப்புகள் அதிகம் ஏற்பட்டு வருகிறது. கோவிட் பாதிப்பிற்கு பிறகு இதயம் பாதிப்புகள் நுரையீரல் பாதிப்புகள் என்பது கூடுதலாகி வருகிறது. 3வது நோய் என்று சொல்லும் போது முதலில் இதய பாதிப்புகளுக்கான மரணங்கள், பக்கவாத பாதிப்புகளுக்கான மரணங்கள், தொடர்ந்து 3வது நோய் பாதிப்பு என்றால் நுரையீரல் அடைப்புக்கான மரணங்கள் என்று அதிக அளவில் மரணங்களை சந்திக்கின்ற நோயாக இருப்பது COPD ஆகும். இந்த நோய்க்கு முற்றுப் புள்ளி வைக்கின்ற வகையில் மக்களிடையே போதுமான அளவிற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், முதியவர்கள் நெடுங்காலம் புகை பிடிப்பவர்கள், நுரையீரல் தாக்கம் அதிகம் ஏற்படுபவர்கள் என்று கண்டறிந்து நுரையீரல் தாக்குவதற்குரிய காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்குரிய விழிப்பு ணர்வை ஏற்படுத்துவதற்கும், பொது மக்களுக்கு நீடித்த நாள்பட்ட நுரையீரல் தொற்றிற்கு முக்கிய காரணிகளாக விளங்குகின்ற நெடுங்காலம் புகைப் பிடிக்கும் பழக்கம், காற்று மாசு, தொழில் சார் நோய் பாதிப்புகள் போன்றவை குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படவிருக்கிறது. எனவே இந்த திட்டத்தை இன்றைக்கு தொடங்கி வைத்திருக்கிறோம்.

கொழுப்பு கல்லீரல் நோய்

அதேபோல் நிதிநிலை அறிக்கையில் அறிவித்த இன்னொரு சிறப்பான திட்டம் கொழுப்பு மிகு கல்லீரல் நோய். இதுவும் கூட அதிகம் உயிரிழப்புகளை தருகின்ற ஒரு நோயாகும். எனவே கொழுப்பு மிகு கல்லீரல் நோய் குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தி, ஆரம்ப நிலை பரிசோதனைகளை மேற்கொள்வது போன்ற பல்வேறு திட்டங்கள் இன்றைக்கு தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த கால வாழ்க்கை முறையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களினால் உலகெங்கும் சுமார் 30% மக்கள் கொழுப்பு மிகு ஈரல் நோய் பாதிப்புகளுக்கு உள்ளாகிறார்கள். இதை கருத்தில் கொண்டு களப்பணியாளர்கள் மூலம் நோய் குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்துவது, அறிகுறிகள் உள்ளவர்களை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உரிய மருத்துவ பரிசோதனைகளுக்காக கல்லீரல் பாதிப்புக்கான இரத்த பரிசோதனைகளை மேற்கொள்ள வழிவகை செய்வது போன்ற பல்வேறு விஷயங்களை மேற்கொள்வது போன்ற திட்டங்கள் குறித்து பயிற்சி முகாம் இன்று தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த பயிற்சியில் மக்களைத் தேடி மருத்துவம் எனும் மகத்தான திட்டத்தை மக்களிடையே சென்று சேர்த்த மாவட்ட திட்ட அலுவலர்கள் அனைவருமே இங்கே பங்கேற்றிருக்கிறார்கள். மாவட்ட பயிற்சி மருத்துவ அலுவலர்கள் அனைவரும் பங்கேற்றிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதிலும் இருக்கின்ற சுகாதார மாவட்டங்கள் 45 இலிருந்து மாவட்ட சுகாதார அலுவலர்கள் காணொளி வாயிலாகவும் பங்கேற்று இருக்கிறார்கள். ஆக மிக முக்கியத்துவம் வாய்ந்த பயிற்சி பயிலரங்கத்தை இன்று தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

நலம் காக்கும் ஸ்டாலின் - திட்டம்

இது மட்டுமல்லாமல் இந்த துறையில் இன்னொரு மகத்தான சாதனையாக முதலமைச்சர் அவர்கள் இன்னமும் நோயற்ற தமிழ்நாடு, நோய் பாதிப்புகள் அற்ற தமிழ்நாட்டு மக்கள் என்கின்ற வகையில் பல்வேறு புதிய திட்டங்களை கொண்டு வர அறிவுறுத்தியிருக்கிறார்கள். அந்தவகையில் இன்றைக்கு தமிழ்நாட்டில் முதலமைச்சர் அவர்களின் மனதிற்கு மிகவும் நெருக்கமான ஒரு சிறப்பான திட்டம் ஒன்று மிக விரைவில் சென்னையில் தொடங்கி வைக்கப்படவிருக்கிறது. இந்த திட்டத்தின் பெயர் “நலம் காக்கும் ஸ்டாலின்“.

பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறியியல் மருத்துவம் மற்றும் மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், இருதயவியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நுரையீரல் மருத்துவம், இந்திய முறை மருத்துவம் என்று பல்வேறு மருத்துவ முறைகள் இதில் ஒருங்கிணைய இருக்கின்றது.

Master Health Check up என்று சொல்லக்கூடிய முழு உடற் பரிசோதனை மக்களைத் தேடி, மக்கள் இருக்கும் இடங்களுக்கே சென்று பரிசோதனைகள் செய்யும் திட்டம் மிக விரைவில் தொடங்கப்பட உள்ளது. இந்த திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களின் மாற்றுத்திறன் சதவிகிதம் கண்டறிந்து சான்றிதழ் தருகின்ற திட்டம் இந்த முகாம்களில் தரவிருக்கிறது. புற்று நோய்க் கான பரிசோதனைகள் இந்த திட்டத்தில் செயல்படுத்தப்படவிருக்கிறது. முதலமைச்ச ரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் இதுவரை தமிழ்நாட்டில் 1 கோடியே 44 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள் என்றாலும் இன்னமும் புதிதாக தனிக் குடும்பங்கள் அமைத்துக் கொண்டவர்களுக்கு விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தில் சேர்ப்பதற்கு ஏதுவாக அவர்க ளுக்கு முகாம்கள் நடத்தப்பட்டு சேர்க்கப்பட்டு வருகிறது என்றாலும் நலன் காக்கும் ஸ்டாலின் எனும் திட்டத்தில் புதிய பயனாளர்களுக்கு காப்பீடு அட்டையும் வழங்கப்படவிருக்கிறது.

எனவே ஒருங்கிணைந்த சுகாதார முகாமாக இந்த முகாம் அமையவிருக்கிறது. நோய் பாதிப்புகள் கண்டறிதல், தொடர் சிகிச்சை செய்தல், வரையறுக்கப்பட்ட பரிசோதனைகள் செய்தல், நோயறிதல் மற்றும் பரிந்துரைக்கு முன்னுரிமை என்கின்ற வகையிலான இந்த மகத்தான திட்டம் மிக விரைவில் சென்னையில் தொடங்கி வைக்கப்பட உள்ளது. இந்த முகாம் வருகின்ற டிசம்பர் இறுதிக்குள் 1256 இடங்களில் நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது தமிழ்நாட்டில் இருக்கி ன்ற வட்டாரங்களின் எண்ணிக்கை 388, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் 3 வீதம் 1164 முகாம்களும், சென்னையில் 15 மண்டலங்களில் மண்டலத்திற்கு 1 என்கின்ற வகையில் 15 முகாம்களும், தமிழ்நாட்டில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மாநகராட்சிகள் 5, இந்த 5 மாநகராட்சிகளில் தலா 4 முகாம்களும், 10 இலட்சம் மக்கள் தொகைக்கு குறைவான 19 மாநகராட்சிகளில் தலா 3 முகாம்களும், ஒட்டுமொத்தமாக 1256 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நல வாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வ விநாயகம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி, இணை இயக்குநர் (தொற்றா நோய்) மரு.கிருஷ்ணராஜ், திட்ட அலுவலர் (தொற்றா நோய்) மரு.பிரவின் மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மொடக்குறிச்சி

சரஸ்வதி எம்.எல்.ஏ. மகள் திருமதி கருணாம்பிகை மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 5 -

மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சரஸ்வதியின் மகள் திருமதி கருணாம்பிகை மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சரஸ்வதி அவர்களின் மகள் கருணாம்பிகை அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

பெற்ற மகளை இழந்து வாடும், திருமிகு. சரஸ்வதி அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி ஆலோசனைப்படி பாலக்கோடு தி.மு.க. கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.கருணாநிதி தலைமையில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழாவையொட்டி புலிக்கரை ஊராட்சியில் ஏழை எளியோருக்கு இனிப்புகள் மற்றும் உணவு வழங்கப்பட்டது. நிகழ்வில் ஒன்றிய அவைத்தலைவர் சிவராஜ், துணை செயலாளர் சந்திரா நேரு, பொருளாளர் பூமணி, மாவட்டப் பிரதிநிதி சண்முகம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.ஆர்.சி. செல்வராஜ் உள்ளிட்ட கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.